Sub-Magistrate's Court.

* 198. *Q.*—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to abolish any Sub Magistrate's Court in the State due to the reduction in the number of criminal cases in those Courts;

(*b*) whether there is a fall in the filing of Indian Penal Code cases also; and

(*c*) if so, the reasons therefor ?

சப்-மாஜிஸ்ட்ரேட் நீதி மன்றங்கள்

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம் மாநிலத்திலுள்ள சப்-மாஜிஸ்ட்ரேட் நீதி மன்றங்கள் எவற்றையேனும் அவற்றில் தாக்கல் செய்யப்படும் குற்றவியல் வழக்குகள் குறைந்த காரணத்தால் எடுத்துவிடுவதற்கான செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

(இ) இ.பி.கோ. வழக்குகள் தாக்கல் செய்வதும் குறைந்துள்ளதா ?

(உ) ஆமெனில், அதன் காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) & (உ) ஐ. பி. சி. வழக்குகளின் எண்ணிக்கை குறைவு பற்றி இது வரை கணக்கு எடுக்கப்படவில்லை.

Detenus of West Bengal State.

* 199. *Q.*—THIRU S. VELLAPANDIAN (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the total number of detenus of West Bengal State in this State ; and

(*b*) the jails in which they have been kept ?

மேற்கு வங்க மாநிலத்தைச் சேர்ந்த பாதுகாப்புக் கைதிகள்

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மேற்கு வங்க மாநிலத்தைச் சேர்ந்த பாதுகாப்புக் கைதிகள் எத்தனை பேர் இம்மாநிலத்தில் வைக்கப்பட்டுள்ளனர் ?

(இ) அவர்கள் எந்தச் சிறைகளில் வைக்கப்பட்டுள்ளனர் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) உள்நாட்டு பாதுகாவல் பராமரிப்புச் சட்டத்தின்கீழ் காப்பு சிறையாளர்களாக 691 பேர் மேற்கு வங்காள சிறைகளிலிருந்து கடலூர் மத்திய சிறைச்சாலைக்கு 3—1—72 அன்று மாற்றப்பட்டனர். 20—7—72 நாளின்படி மேற்கு வங்காளத்திற்கு மாற்றப் பட்டோ அல்லது சிறைச்சாலைகளிலிருந்து விடுவிக்கப்பட்டோ வெளியேறிய 128 காப்பு சிறையாளர்களைத் தவிர எஞ்சியுள்ளவர் 563 காப்புச் சிறை யாளர்கள்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: தலைவர் அவர்களே, மேற்கு வங்காளத்தைச் சேர்ந்தவர்களில் தமிழ் நாட்டில் கைதிகளாக வைத்திருப்பவர் களில் எத்தனை பேர் நக்ஸலைட்கள் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, யார் யார் எந்தெந்தப் பிரிவைச் சேர்ந்த கைதிகள் என்ற விவரங்கள் என்னிடம் இல்லை.

THIRU A. R. DAMODARAN: Sir, It has been mentioned in the newspapers that some Naxalites are unfortunately in the Cuddalore jail. May I know, Sir, when they are released whether they are escorted to the Madras State border and then released or whether they are released in Madras State itself?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் அவர்களுடைய நடவடிக்கை பரவாமல் பார்த்துக்கொள்ள அரசாங்கம் தக்க கண்காணிப்புடன் இருக்கிறது.

திரு. எம். ராஜா அய்யர்: தலைவர் அவர்களே, அவர்களுடைய பராமரிப் புக்கு ஆகும் செலவை மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, அதை மேற்கு வங்காள அரசு ஏற்றுக்கொள்கிறது.

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவர் அவர்களே, மேற்கு வங்காளத்திலிருந்து கொண்டு வரப்பட்டு தமிழ் நாட்டில் வைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு மிக அதிகமான சௌகரியங்கள் இங்கு கிடைப்பதாகவும், அவர்கள் தங்களுடைய மாநிலத்திற்குப் போக மறுப்பதாகவும் தெரியவருகிறது. அதைப்பற்றி அரசாங்கம் அறியுமா என்று தெரிய வேண்டும்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, அந்தக் கைதிகளுக்காகப் பரிந்து பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இன்னும் அதிக வசதிகள் செய்து தர வேண்டுமென்று கேட்டார்கள். மேற்கு வங்க அரசு சட்டப்படி என்னென்ன வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமோ அவைகளையெல்லாம் கொடுக்கின்றோம் என்று உறுதி அளித்தோம்.

திரு. எஸ். எஸ். தென்னரசு : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் இருக்கும் மேற்கு வங்காளக் கைதிகள் பராமரிப்புக்காகச் செலவாகும் தொகையை மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, மேற்கு வங்காள அரசு ஏற்றுக்கொள்கிறது என்று சொன்னேன்.

திரு. சி. வி. ராஜகோபால் : தலைவர் அவர்களே, இப்பொழுது இங்கு இருக்கின்ற கைதிகள் மேற்கு வங்கத்தைச் சேர்ந்தவர்களா அல்லது பாகிஸ்தானைச் சேர்ந்தவர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்மிபுகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, மேற்கு வங்காளத்தைச் சேர்ந்தவர்கள்தான்.

Agricultural Implements

*200 *Q.*—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR : Will the Hon. the Minister for Co-operation be pleased to state whether there is any proposal with the Government to introduce contract system for the maintenance and repair of the Agricultural Implements ?

வேளாண்மைக் கருவிகள்

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

வேளாண்மைக் கருவிகளைப் பராமரித்தல், பழுது பார்த்தல் ஆகிய, பணிகளை முறையாக மேற்கொள்ள ஒப்பந்த முறை ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனார் : இல்லை.